**திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 7 வட்டங்களிலும் அரசு கேபிள் டிவி நிறுவனம் கீழ் செயல்பட்டுவரும் அரசு இ – சேவை மையங்கள் மூலம் மின் கட்டணம் செலுத்துதல்**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 7 வட்டங்களிலும் அரசு இ – சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. இம்மையங்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் இதர அரசு விடுமுறை நாட்கள் தவிர பிற நாட்களில் காலை 09.45 மணி முதல் மாலை 05.45 மணி வரை செயல்படும். பொதுமக்கள் இம்மையங்களுக்கு நேரில் சென்று அரசின் சேவைகளைப் பெறலாம்.

அரசு இ – சேவை மையங்களில் தற்போது, கூடுதலாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டி மின் கட்டணத்தை செலுத்தும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களது மின் கட்டணத்தை ரொக்கமாக அரசு இ – சேவை மையங்கள் மூலம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மின் கட்டணம் செலுத்தும் வசதி பிரதி தினம் காலை 9.45 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை மட்டுமே செலுத்த முடியும்.

மின் கட்டணத் தொகை ரூ.1/– லிருந்து ரூ.1000/- க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ.10/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.1001/– லிருந்து ரூ.3000/- க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ.20/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.3001/– லிருந்து ரூ.5000/- க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ.30/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.5001/– லிருந்து ரூ.10,000/- க்குள் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ.40/- ஆகவும், மின் கட்டணத் தொகை ரூ.10,000/- க்கு மேல் இருந்தால் அதற்கான சேவைக் கட்டணம் ரூ.50/- ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் மின் கட்டணத்தொகையுடன் வரையறுக்கப்பட்டுள்ள சேவைக் கட்டணத்தைத் தவிர கூடுதலாக கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர்,
திருவாரூர்